# "நான் மனிதப் பிறவியேயில்லை போலும்"
# சவுதி அரேபியாவில் ஆசிய வீட்டுப் பணிப்பெண்கள் மீதான அத்துமீறல்கள்


**I. சாராம்சம்** ....................

சட்ட வரம்புகளும் சேர்த்துக்கொள்ளும் நடைமுறைகளும் ....................

வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிரான அத்து மீறல்கள் ....................

நலிவான பரிகார செயல் முறைகள் ....................

சவுதி அரசாங்கத்துக்கு முன்வைக்கும் பிரதான பரிந்துரைகள் ....................

குடிபெயர்வாளர்களின் சொந்த நாட்டு அரசாங்கங்களுக்கு முன்வைக்கும் பிரதான பரிந்துரைகள் (இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளம் உட்பட) ..........

**II. செயல்முறை** ....................

**III. சவுதி அரேபியாவுக்கான ஆசிய பெண்களின் உழைப்பு குடிபெயர்வு** ....................

ஆசியப் பெண்களின் குடிபெயர்வுக்கான காரணங்களும் நிலைமைகளும் ....................

சவுதி அரேபியாவில் பெண்களின் நிலைமை ....................

அத்துமீறல்களின் தாற்பரியம் ....................

**IV. குடிபெயரும் வீட்டுப் பணிப்பெண்களுக்கான சட்ட வரம்புகள்** ....................

தொழில் சட்டங்களில் இருந்து விலக்கி வைத்தல் ....................

கபாலா (kafala) முறை ....................

தொழில் ஒப்பந்தங்களும் சேர்த்துக்கொள்ளும் நடைமுறைகளும் ....................

சர்வதேச ஒப்பந்தங்கள் ....................

அண்மைக்கால சீர்திருத்தங்கள் ....................

**V. கட்டாய உழைப்பு, சட்டவிரோத தொழிலாளர் கடத்தல், அடிமை முறை அடிமை முறையையொத்த நிலைமைகள்** ....................

கட்டாய உழைப்பு ....................

சட்டவிரோத தொழிலாளர் கடத்தல் ....................

அடிமை முறை அடிமை முறையையொத்த நிலைமைகள் ....................

**VI. தொழிலுக்காக சேர்த்தல், குடிபெயர்வுடன் தொடர்பான அத்துமீறல்கள், மற்றும் பலாத்காரமாக சேர்த்தல்** ....................

தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளில் நபர்களைச் சேர்க்கும் தரகர்களினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் ....................

சவுதி அரேபியாவில் நபர்களைச் சேர்க்கும் தரகர்களினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் ....................

VII. **மனோரீதியான, உடல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான அத்துமீறல்கள் ..................**
மனோரீதியான மற்றும் வாய் வழியான அத்து மீறல்கள் ....................................................
உடல் ரீதியான அத்துமீறல்கள் ..........................................................................................
உணவு பற்றாக்குறை ஏற்படுத்தல் .....................................................................................
பாலியல் இம்சைக்குள்ளாக்குதலும் அத்துமீறல்களும் .........................................................

VIII. **தொழில் ரீதியான அத்துமீறல்களும் சுரண்டலும் ...................................................................**
சமனற்றதும் குறைவானதுமான சம்பளம் ..................................................................................
கொடுக்கப்படாத சம்பளமும் சம்பளக் குறைப்பும் .................................................................
அதிக வேலைப்பழு, நீண்ட நேரம் வேலை, ஓய்வு நேரக் குறைப்பு ...............................
வசதியீனமற்ற தங்குமிடங்கள் ...................................................................................................

IX. **வீட்டுப் பணிப்பெண்களுக்கெதிரான குற்றவியல் வழக்குகள் .................................................**
விசாரணை நடைமுறைகளில் முறைகேடுகள் ..........................................................................
திருடுவதாக, சூனியம் செய்வதாக எதிரானதும் பொய்யானதுமான குற்றச்சாட்டுகள் ...
“ஒழுக்கக்” குற்றங்கள் ..................................................................................................................

X. **சவுதியின் பாதுகாப்பு நடைமுறைகளும் குறைபாட்டு இடைவெளிகளும் ............................**
சமூக சேவைகள் அமைச்சு, வீட்டுப்பணிப் பெண்களுக்கான மையம் .............................
நாடு கடத்தப்படல் .........................................................................................................................
குடிபெயர்வோரின் மிச்ச மீதிகளை (உடல்,அஸ்தி) சொந்த நாட்டுக்கு அனுப்புதல் ....

XI. **தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளில் உள்ள பாதுகாப்பு நடைமுறைகளும் ..............**
குறைபாட்டு இடைவெளிகளும் ...................................................................................................
சவுதி அரேபியாவில் தொழில் செய்வதற்குள்ள கட்டுப்பாடுகள் .....................................
வளப் பற்றாக்குறையும் சமநிலையில்லாத பிரதிபலிப்புகளும் .......................................
தொழில் சர்ச்சைகளில் வெளிநாட்டு தூதரகங்கள் மேற்கொள்ளும்
மத்தியஸ்தங்கள் .............................................................................................................................

XII. **விரிவான பிரிந்துரைகள் ...........................................................................................................**
சவுதி அரேபிய அரசாங்கத்திற்கு .............................................................................................
தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு (இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளம் உட்பட) .......................................................................
சகல அரசாங்கங்களுக்கும் .........................................................................................................
சர்வதேச தொழில் ஸ்தாபனம் மற்றும் குடிபெயர்வுகள் தொடர்பான சர்வதேச
அமைப்பு என்பவற்றுக்கு ...........................................................................................................
உலக வங்கி மற்றும் தனியார் நிதிய மன்றங்கள் போன்ற நிதி வழங்குனர்களுக்கு

**நன்றிகள்** ........................................................................................................................................

# I. சாராம்சம்

*ஆரம்பத்தில் நான் எனது மாதச் சம்பளமாக 400 ரியால்களைப் பெற்றுக்கொண்டேன். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை அவர்கள் அதை 100 அல்லது 200 ரியால்களாக அதிகரித்தார்கள். இறுதியாக நான் மாதத்திற்கு 700 ரியால்கள் (182 டொலர்கள்) பெற்றுக்கொண்டேன். நான் அதிகூடிய சம்பளம் எடுக்கும் நேரத்தில் அவர்களை விட்டுச் செல்லும்போது அவர்கள் மேலதிகமாக ஒரு தொகையை எனக்குத் தந்தார்கள். நான் பணத்தைச் சேமிப்பதற்குப் பழகியிருந்தேன். நான் 200 ரியால்கள், 500 ரியால்கள் அல்லது 700 ரியால்கள் என் வீட்டிற்கு அனுப்பினேன். ..... எனது கணவர் மிகக் கவனமாக பணத்தை செலவழித்தார். அவர் அப் பணத்தை இந்த வீட்டைக் கட்டுவதற்கு, எனது பிள்ளைகளை படிப்பிப்பதற்கு, உணவு கொடுப்பதற்கு, அவர்களின் மருத்துவ செலவுகளுக்கு செலவழிக்க பயன்படுத்தினார்.*

—கு. பாத்திமா, மீளத் திரும்பிய வீட்டுப் பணிப்பெண், கம்பஹா, இலங்கை 2006 நவம்பர் 08.

*எனது முழுக் கதையையும் கூறுவதென்றால் அதை ஒரு நாளிலோ அல்லது ஒரு இரவிலோ கூறி முடிக்க முடியாது. நான் மீளத் திரும்பி வரும்போது என்னுடன் எதுவுமே கொண்டுவர முடியாமலே போயிருக்கலாம்............ நடுநிசி 12 மணியிலிருந்து அதிகாலை 2.30 மணிவரை எனது தொழில் எசமாட்டி என்னை ஒரு மின்சாரக் கம்பியினால் தாக்கினாள். இறுதியாக அவள், "மற்ற மெடம்கள் (தொழில் எசமாட்டிகள்) என்றால் உன்னை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். நான் அனுப்பமாட்டேன். உனக்கு இரண்டே இரண்டு வழிகள் தான் இருக்கின்றன. ஒன்றில் நீ சம்பளம் இல்லாமல் வேலை செய்ய வேண்டும் அல்லது நீ இங்கே சாக வேண்டும். நீ தற்கொலை செய்துகொண்டாய் என நான் பொலீசுக்கு அறிவித்துவிடுவேன்," எனக் கூறினாள்.*

*நான் சம்பளம் இல்லாமல் வேலை செய்தேனாகிலும் என்னை அடிக்கமாட்டார்கள் என எந்த நிட்சயமும் எனக்கு இருக்கவில்லை. அதனாலேதான் நான் தப்பி வந்தேன். சகல கதவுகளும் மூடியிருந்தன. அதனால் வெளியே செல்வதற்கு வழியேதும் இருக்கவில்லை. யன்னல்களில் இரும்புக் கம்பிகள் பொருத்தியிருந்தார்கள். ஆனாலும், குளிப்பறையில் காற்றுப் புகுவதற்காக ஒரு ஓட்டை வைத்திருந்தார்கள். அதற்குள்ளால் நான் தப்பி வந்தேன். தப்புவதற்கு முன்னர் நான் அல்லாவிடம் மன்றாடிக்கொண்டேன். அவள் என்னை ஒரு மாதமாக குளிக்க அனுமதிக்காததினால் எனது உடல் அழுக்காயிருந்தாலும் எனக்கு உதவும்படி அல்லாவை மன்றாடினேன்.*

—ளு. மினா, இந்தோனேசிய வீட்டுப் பணிப்பெண், ரியாத், சவூதி அரேபியா, மார்ச் 12, 2008

குடி பெயர்வானது வாய்ப்பு, விபரீதம் என இரண்டையும் தருகின்றது. வேறெங்கையும்விட இந்த நிலமையானது ஆசியாவுக்கும் மத்திய கிழக்கிற்கும் இடையே நிகழும் பாரிய

அளவிளான ஒப்பந்த ரீதியான தொழிலாளர் நகர்வில் காணக்கூடியதாக உள்ளது. சாதகமான பக்கத்தை பார்த்தால் அத் தொழிலாளர்கள் பில்லியன் கணக்கான டொலர்களை தமது வீடுகளுக்கு அனுப்புகிறார்கள். சிறந்த உதாரணங்களாக எடுத்துக்கொண்டால் இந்தப் பணமானது அவர்களின் குடும்பங்களை வறுமையில் இருந்து மீட்டெடுக்கின்றது. அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள உதவுகின்றது. கல்விக்கு செலவழிக்க உதவுகின்றது. மருத்தவ வசதிகளுக்காக செவழிக்கப்படுகின்றது. அதேவேளை, தமது சொந்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் உதவுகின்றது. மோசமான உதாரணங்களை எடுத்துக்கொண்டால் தொழிலாளர்கள் தமது வாழ்க்கையையே இழந்து விடுகின்றனர். அல்லது பாலத்காரமாக தொழில் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதுடன், சட்ட விரோதமான கடத்தல்களுக்கும் உள்ளாகுகின்றனர். குடிபெயர்ந்தோரில் அனேகமானோர் இந்த இரண்டு நிலைகளுக்கும் இடையே ஏதோ ஒரு இடத்தில் அடங்குகின்றனர்.

பருமட்டாக 1.5 மில்லியன் பணியாளர்கள் இந்தோனேசியா, இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து வந்து சவுதி அரேபியாவில் பணியாற்றுகின்றனர். இப்பெண் பணியாளர்கள், அவர்கள் உழைக்கும் வெளிநாட்டுச் செலாவணியின் காரணமாக அவர்களது நாட்டில் "இன்றைய காலத்தின் வீராங்கணைகளாக" பார்க்கப்பட்டாலும், சவுதி அரேபியாவில் ஏனைய வகையான தொழிலாளர்கள் பெறும் பாதுகாப்பை விட மிகக் குறைந்த பாதுகாப்பையே பெற்றுக்கொள்ளுகின்றனர். அத்துடன் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத வகையான இம்சைகளுக்கு முகம் கொடுப்பதோடு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் தொடர்பாக மிகக் குறைந்த எதிர்பார்புடனேயே வாழுகின்றனர். சவுதி அரேபியாவில் பணிபுரியும் 8 மில்லியன் வெளிநாட்டுத் தொழிலாளர்களில் கால்வாசியை விட குறைவாகவே பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கையிருந்தாலும், தமக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளில் மிகப் பெருந்தொகையானவை வீட்டுப் பணிப் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் பற்றியதாகவே இருப்பதாக தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் தூதுவராலயங்கள் தெரிவிக்கின்றன.

அனேகமான வீட்டுப் பணிப்பெண்கள் பண்பான சூழலில் வேலை செய்யும் அதேவேளை, ஏனையவர்கள் சம்பளம் வழங்கப்படாமை, பலாத்காரமாக தடுத்து வைக்கப்படல், உணவு வழங்கப்படாமை, அதிக வேலைப் பழு மற்றும் மனோ ரீதியான, உடல் ரீதியான, பாலியல் ரீதியான இம்சைகளுக்கு முகம் கொடுப்பதுடன் சிதிரவதைகள் உட்பட பல வன்முறை அத்துமீறல்களுக்கு முகம்கொடுத்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பலாத்காரமாக தொழில் செய்வித்தல், சட்டவிரோதமாக தொழிலாளர் கடத்தல், மற்றும் அடிமை நிலையையொத்த தன்மையுடன்கூடிய பெரும் எண்ணிக்கையான சம்பவங்களை ஹியூமன் ரைட்ஸ வொச் அமைப்பு தொகுத்துள்ளது.

ஹியூமன் ரைட்ஸ வொட்ச் அமைப்பினால் நேர்காணல் செய்யப்பட்ட சவுதி தொழிலாளர் மற்றும் சமூக விவகாரம் தொடர்பான அதிகாரி, வீட்டுப் பணிப் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் அத்துமீறல்கள் தொடர்பான பிரச்சினையை ஏற்றுக் கொண்டாலும் தமது நாட்டில் பெரும்பாலான வீட்டுப் பணிப்பெண்கள் சிறப்பாக நடத்தப்படுவதாக கூறினார். தொழிலாளர் உரிமைகள் உட்பட வேறு பல உரிமைகள் தொடர்பான அத்து மீறல்களுக்கு முகம் கொடுக்கின்ற குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்கள் எண்ணிக்கை தொடர்பான சரியான தகவலோ புள்ளி விபரங்களோ கிடையாது. ஆனாலும் தொழிலாளர் சட்டக் கோவையில் உள்ள ஓட்டைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட குடிபெயர் நடைமுறைகள் என்பன வீட்டுப் பணிப் பெண்கள் அத்து மீறல்களுக்கு உள்ளாகக்கூடிய ஆபத்தை அதிகரிக்கின்றன. சவுதியில் நிலவும், மிகக் கடுமையான வகையில் பெண்களை ஒதுக்கி வைத்தல் மற்றும் பெண்களுக்கு இம்சை செய்தல் போன்ற ஒட்டு மொத்தமான நிலைமையானது அங்கு வீட்டுப் பணிப்பெண்கள் தனிமைப்படுத்தப்படுவதற்கு

பங்களிக்கின்றது. அத்துமீறல்களுக்கு முகம் கொடுத்தவர்களுக்கான பூரண பரிகாரங்கள் கிடைப்பது தொடர்பாக மிகச் சிறிய எதிர்பார்ப்பே அங்கு எஞ்சியுள்ளது.

## சட்ட வரம்புகளும் சேர்த்துக்கொள்ளும் நடைமுறைகளும்

2005 செப்டெம்பர் 27ம் திகதிக்கான முடிக்குரிய கட்டளைக் கோவையின்படி சீர்த்திருத்தம் செய்யப்பட்ட சவுதித் தொழிலாளர் சட்டத்தின் மூலம் ஏனைய தொழிலாளர்களுக்கு உறுதி செய்யப்பட்ட உரிமைகளான வாரத்திற்கு ஒருமுறை ஒரு நாள் விடுமுறை, வேலை செய்யும் மணித்தியாலங்கள் தொடர்பாக குறிப்பான எண்ணிக்கை என்பன போன்ற உரிமைகளில் இருந்தும் வீட்டுப் பணிப்பெண்கள் விலக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய தொழிலாளர்களுக்கு உள்ள பாதுகாப்புகளும்கூட அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. 2007ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நீதிமன்ற முறை சீர்திருத்தத்தின்படி புதிய தொழில் நீதிமன்றங்கள் நிறுவப்படல் வேண்டும். வீட்டுப் பணிப்பெண்களை உள்ளடக்கக்கூடிய வகையில் தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்தப் போவதாக அரசாங்கமானது மீண்டும் மீண்டும் கூறினாலும் 2008 ஜுன் மாதம்வரை இச்சட்ட இணைப்பு பூரணப்படுத்தப் படவில்லை.

அவ்வாறான இணைப்பொன்றை அறிமுகம் செய்து அமுல்படுத்துவதானது ஒரு முக்கிய செயற்பாடாகவே ஹியூமன் ரைட்ஸ் வொச் அமைப்பு கருதுகின்றது. எவ்வாறாயினும் சீர்த்திருத்தங்கள் உண்மையிலேயே பயனளிக்க வேண்டுமாயின் சவுதி அதிகாரிகள் ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்குகின்ற சமனான பாதுகாப்புக்களை வீட்டுப் பணிப்பெண்களுக்கும் அறிமுகப்படுத்துவதோடு, அவர்களை சகல வழிகளிலும் பலப்படுத்துவதற்கு போதுமான செயல் முறைகளை வகுப்பதும் அவசியமானது. அவ்வாறு இல்லாவிடின், இவ்விணைப்பானது வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிராக நிகழும் சட்ட ரீதியான ஒதுக்கல்களுக்கு பரிகாரம் செய்ய இயலாத வெறும் அலங்கார மாற்றமாகவே இருந்து விடும்.

சவுதி அரேபியாவில் பல்வேறு கட்டுப்பாடுகளை இடக்கூடிய குடிபெயர் தொழிலாளர்களின் தொழில் வீசாக்கள் கபாலா என்னும் வீசா அனுசரணை முறைமையின் காரணமாக, தொழில் எசமானர்கள் அவர்களை சுரண்டுவதற்கும், இம்சைகளுக்கு உட்படுத்துவதற்கும் எண்ணை வார்ப்பதாக அமைந்திருக்கின்றது. இம்முறைமையின் கீழ் ஒரு தொழில் எசமானர் தான் வேலைக்கமர்த்தும் ஒரு குடிபெயர் தொழிலாளரின் முழுப் பொறுப்பையும் கையேற்பதோடு, அத்தொழிலாளர் சவுதி அரேபியாவிற்குள் நுழைவதற்கு விசேட முன் அனுமதி வழங்குதல், அவர் தம் தொழிலை விட்டுச் செல்வதற்கு அல்லது அதை மாற்றிக் கொள்ளுவதற்கு தெளிவான அனுமதி வழங்குதல் என்பவற்றை செய்ய உரித்துடையவராகிறார். இக் கபாலா முறைமையானது தொழில் எசமானர்கள் தொழிலாளர்கள் மீது பாரிய கட்டுப்பாட்டை வைத்திருக்கும் உரித்தை அவர்களுக்கு கொடுக்கின்றது. நாட்டை விட்டுச் செல்வதற்கு அவர்களின் தொழில் எசமானர்கள் அனுமதி வழங்க மறுத்ததனால் இம்சை நிறைந்த அச் சூழ்நிலையிலிருந்து விடுபட்டு தப்பிச் சென்ற, மற்றும் ஒப்பந்தங்கள் முடிவடைந்த பின்னரும் தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியாமல் இருந்த பல பெண் பணியாளர்கள் தொடர்பான சம்பவங்களை ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்பு ஆவணப்படுத்தியுள்ளது.

குடிவரவுச் சட்டங்கள் மற்றும் தொழிற்ச்சட்டங்களில் உள்ள குறைபாடுகளினால் மட்டும் தான் வீட்டுப் பணிப்பெண்கள் இம்சைகளுக்கு உள்ளாகிறார்கள் என்பதில்லை. தொழிலாளர்களை ஏற்றுமதி செய்கின்ற நாடுகள், மற்றும் சவுதி அரேபியா போன்ற இரு இடங்களிலும் உள்ள பாரிய, இலாபம் சம்பாதிக்கின்ற, தொழிலாளர்களை சேர்த்தனுப்பும்

ஒப்பந்தக் காரர்களைக் கொண்ட இத்தொழில் துறையிலுள்ள பல குறைபாடுகளினாலும் அவர்கள் துன்பம் அனுபவிக்கின்றனர். கடந்த பல தசாப்த்தங்களாக குடிபெயர்வானது மிகக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ள அதேவேளை ஆசியாவிலிருந்து பணிப்பெண்களை சேர்த்து மத்திய கிழக்கின் தொழில் எசமானர்களுக்கு வழங்கும் தொழிலானது பெருகியும் உள்ளது. தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளில் அவர்களை சேர்த்தனுப்புவர்கள் பெருந்தொகையான பணத்தை அறவிடுவதோடு அப்பணிப் பெண்கள் செய்ய வேண்டிய தொழில் தொடர்பாக முழுமையில்லாத அல்லது தவறான தகவல்களையே வழங்குகின்றனர். இந்தோனேஷியாவின் பெண்களும், இளம் பெண்களும் பல மாதக்கணக்கில் பலாத்காரமாக தடுத்து வைக்கப்படும் நிலைமைக்கு உள்ளாக்கப்படுவதோடு புறப்படுவதற்கு முன்னர் பயிற்சி நிலையங்களில் வைத்தும் பல்வேறு அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சவுதி அரேபியாவின் தொழில் ஏஜென்டுகளும், வீட்டுப்பணிப்பெண்கள் உதவி கேட்டு மேற்கொண்ட கோரிக்கைகளை கவனத்திற்கு எடுக்காமல் அல்லது மறுத்த பல சந்தர்ப்பங்கள் உட்பட பணிப்பெண்கள் தமது சொந்த நாட்டுக்கு திரும்பிச் செல்வதற்கு விருப்பந் தெரிவித்த பொழுது அவர்களுக்கான செலவை தவிர்ப்பதற்காக அவர்களை வீட்டிற்கு அனுப்பாமல் வேறு தொழில் எசமானர்களிடம் மாற்றி விட்ட பல சம்பவங்களை ஹியுமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்பு ஆவணப்படுத்தியுள்ளது.

கபாலா முறைமையில் சீர்திருத்தம் செய்து அதற்கு பதிலாக மூன்று அல்லது நான்கு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் பெரும் நிறுவனங்களை உருவாக்கி அவர்களை வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்லும் பணிப்பெண்களின் வீசா அனுசரணையாளர்களாக ஆக்குவது தொடர்பாக சவுதி அரசாங்கம் தற்போது சிந்தித்து வருகின்றது.

இம்மாற்று வழியானது தொழில் எசமானர் அனுசரணையாளராக இருப்பதனால் இயல்பாகவே ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீர்க்கின்றது. இருந்தாலும் குடிபெயர் தொழிலாளர்களின் வாழ்க்கையினூடாக இலாபம் சம்பாதிக்கும் பாரிய நிறுவனங்கள் சிலவற்றின் கட்டுப்பாட்டை கொண்டு வருவதானது வேறுபல புதிய சவால்களை உருவாக்குகின்றது. தொழிலாளர்களை வேலைக்குச் சேர்க்கும் ஒப்பந்தக் காரரினால் அக்குடிபெயர் பணிப்பெண்கள் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படுதல் மற்றும் வேறுபல ஊழல்கள் நிகழாத வண்ணம் தடுக்க வேண்டும் எனில், அக்குடிபெயர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கக் கூடிய வகையிலான மிகக் கடுமையானதும் சுதந்திரமானதுமான கண்காணிப்பு செயல்முறைகளையும் இச்சீர்த்திருத்தங்களுக்குள் உள்ளடக்கல் வேண்டும்.

## வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அத்துமீறல்கள்.

அனேகமான வீட்டு பணிப்பெண்களுக்கு, அவர்களை நன்றாக நடத்துகின்ற, ஒழுங்காக கொடுப்பனவுகளை வழங்குகின்ற, மற்றும் வேலை செய்யக்கூடிய சிறப்பான சூழலை வழங்குகின்ற தொழில் எசமானர்கள் கிடைக்கக் கூடும். இப்பணிப்பெண்களின் அனுபவமானது வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் அதனால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக பெரும்பாலும் தமது சொந்த நாடுகளில் கவர்ச்சிகரமான பிரச்சாரம் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன. ஆனால் துரதிஷ்ட வசமாக ஆகக் குறைந்தது நாகரீகமாகத் தொழில் செய்யக்கூடிய தராதரத்துடனான இடமொன்று கிடைப்பதென்பது ஒரு அதிஷ்டமே அன்றி எந்தவிதத்திலும் உத்தரவாதம் இல்லை. எனவே அவ்வாறு அதிஷ்டமில்லாதவர்கள் அடங்கிய மிக மோசமாக சுரண்டல் நிகழக்கூடியதும் அதிலிருந்து

வெளியேறுவதற்கு மிக சிறிய வாய்ப்புக்களே உள்ளதுமான பொறிக்குள் அகப்பட்டுக் கொள்ளுகின்றனர்.

பணிப்பெண்களின் சட்டபூர்வ நிலை தொடர்பாக தமக்கிருக்கும் கட்டுப்பாட்டு உரிமை மற்றும் சவுதி தொழிற் சட்டங்களின் கீழ் தமக்கிருக்கும் கட்டுப்பாடுகள் என்பவற்றை தமக்கு வாய்ப்பான காரணிகளாக சில தொழில் எசமானர்கள் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் ராஜதந்திரிகள், வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் சவுதி அதிகாரிகள் ஆகியோருடன் நடத்திய நேர்காணல்களின்போது, சம்பளம் வழங்காமை அல்லது குறைந்த சம்பளம் வழங்குதல் என்பவையே பெரும்பாலும் பொதுவான முறைப்பாடுகளாக காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தாம் தமது சொந்த நாடுகளில் ஒப்பந்தங்களில் கையொப்பம் இடும்போது தமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டதை விட குறைந்த சம்பளத்தையே தாங்கள் பெற்றுக் கொண்டதாக பல பெண்கள் தெரிவித்தனர்.

தொழில் எசமானர்களால் மேற்கொள்ளப்பட்ட உடல் மற்றும் மனோரீதியான அத்துமீறல் தொடர்பான பல சம்பவங்களையும் ஏஜென்டுகளால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் தொடர்பான சில சம்பவங்களையும் நாங்கள் ஆவணப்படுத்தியுள்ளோம். இவ்வத்துமீறல் சம்பவங்களுக்கு உதாரணங்களாக அடித்தல், வேண்டுமென்றே பழுக்கக் காய்ச்சிய இரும்புகளினால் சுடுதல், அச்சுறுத்தல், அவமானப்படுத்தல் மற்றும் கீழ்மைப்படுத்தும் நோக்கில் அப்பணிப் பெண்ணின் தலையை மொட்டையடித்தல் போன்ற சம்பவங்களை எடுத்துக் கூறலாம். மிகக் குறைந்தளவு உணவு வழங்குதல் என்பதும் ஒரு பொதுவான அத்துமீறலாக காணப்படுகின்றது. ஆண் தொழில் எசமானர்களால் அல்லது அவர்களின் மகன்மார்களினால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான அல்லது பலாத்காரத்திற்கு முயற்சிக்கப்பட்ட அல்லது பாலியல் இம்சைக்குள்ளாக்கப்பட்ட பலரையும் இன்னும் சில சந்தர்ப்பங்களில் உதவிகோரிச் சென்ற பொழுது வெளிநாட்டு தொழிலாளர்களினால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களுக்கு முகம் கொடுத்த பல பெண்களையும் நாம் நேர்காணல் செய்தோம். இவ்வாறான முறைப்பாடுகளைக் கொண்ட பெண்களில் சிலரே சவுதி அதிகாரிகளிடம் முறையிடுவதற்கு முன்வருவதாக தூதுவராலயங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன. இதற்குக் காரணம் வேறு ஆண்களுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் அல்லது திருமணம் ஆகாமல் பாலியல் உறவில் ஈடுபட்டார்கள் அல்லது வேறு விதமான ‘‘ஒழுக்க’’ குற்றங்களில் ஈடுபட்டார்கள் என தம்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என அவர்கள் அஞ்சுவதே ஆகும்.

வெளிநாட்டு தூதரகங்களும் சவுதி சமூக சேவைகள் அமைச்சும் பெற்றுக் கொண்ட அதி கூடுதலான முறைப்பாடுகளில் ‘‘கூடிய வேலைப் பழு’’ என்பது பொதுவானதாகும். அனேகமான வீட்டுப் பணிப்பெண்கள் தாங்கள் ஒரு நாளைக்கு 15 – 20 மணி நேரம் வரை வேலை செய்வதாகவும் பெரும்பாலும் 1 மணித்தியால ஓய்வு அல்லது ஓய்வே கிடைப்பதில்லை எனவும் கூறினர். நேர்காணல் செய்த எவருமே ஒரு முழு நாள் ஓய்வையோ அல்லது சம்பளத்துடனான ஓய்வு நாளையோ பெற்றிருக்கவில்லை. ரம்ழான் நாட்களில் பெரும்பாலும் வேலைச் சுமையும் வேலை நேரமும் அதிகரிக்கின்றன. சுகயீனமுற்று அல்லது காயப்பட்டிருந்தாலும் கூட தாங்கள் வேலை செய்ய வேண்டி இருப்பதாகவும் மிகக் குறைந்த மருத்துவ வசதிகளே தமக்குக் கிடைத்ததாகவும் பல வீட்டுப் பணிப்பெண்கள் கூறினர். மேலும் அதிகமான வீட்டுப் பணிப்பெண்கள் பாரிய வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததோடு மிகக் குறைந்தளவு மிகக் குறைந்தளவு வசதிகளைக் கொண்ட தங்குமிடங்களையே பெற்றுக் கொள்கின்றனர். பொருட்களை பூட்டி வைக்கும் சிறிய அறைகளுக்குள்ளும் ஒரு சம்பவத்தில் குளியல் அறையிலும் படுக்க நேர்ந்ததாக தெரியவந்துள்ளது.

குடிபெயர் தொழிலாளர்கள் தம் நாட்டுக்கு திரும்பிச் செல்ல விரும்பினால் அவர்களின் தொழில் எசமானர்கள் ''வெளியேற்ற வீசா'' வில் (Exit Visa) கையொப்பமிட வேண்டுமென சவுதி குடிவரவுக் கொள்கை தெரிவிக்கின்றது. பெரும்பாலான தொழில் எசமானர்கள் இவ்வெளியேற்ற வீசாவில் கையொப்பமிட மறுப்பதோடு பணியாளர்களின் விருப்பத்திற்கு மாறாக பல மாதக் கணக்கில் அல்லது வருடக்கணக்கில் தொடர்ந்து வேலை செய்யும் படி நிர்ப்பந்திக்கின்றனர். வேறு பல சந்தர்ப்பங்களில், தப்பிச் சென்று பாதுகாப்புத் தங்குமிடங்களில் நீண்ட காலம் காத்து நிற்கும் பணிப்பெண்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக கையொப்பமிடுவதற்கு அவர்களின் முன்னைய தொழில் எசமானர்கள் நீண்ட காலம் மறுத்து வருகின்றனர். தொழில் எசமானர்கள் வீட்டுப் பணிப்பெண்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக தொடர்ந்து வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கின்ற அதேவேளை, மிகச் சுரண்டலான தொழில் சூழ்நிலையையும் உருவாக்குகின்றனர். அத்துடன் உடல் ரீதியான அல்லது பாலியல் ரீதியான இம்சைக்கும் உட்படுத்துகின்றனர். அவர்களின் சம்பளங்களை கொடுக்காது பிடித்து வைத்துக்கொள்ளுகின்றனர். மேலும் அவர்களை வேலை செய்யும் இடத்திற்குள் சிறைபடுத்தி வைக்கின்றனர். இந்த நிலையில் இப்பெண்கள் கட்டாயத் தொழில் முறைமை அல்லது அடிமை முறை என்னும் நிலையிலேயே வைக்கப்படுகின்றனர்.

குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்களின் தனிமைப்பட்ட நிலை, பொருளாதார அழுத்தம் மற்றும் உதவி கூறுவதற்கான மிகக் குறைந்தளவு வாய்ப்புக்கள் என்பதற்கு பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன. வீட்டுப் பணிப்பெண்கள் இவ்வத்துமீறலான சூழ்நிலைகளை விட்டு வெளியேறுவதற்கான எந்தவித வழிவகைகளும் கிடையாது. ஏனெனில் அவர்களின் தொழில் அனுமதிப் பத்திரங்கள் அவர்களை தொழில் எசமானர்களோடு இறுகக் கட்டிப்போடுகிறது. வேலையை விட்டு விலகுதல் அல்லது வேலையை இழத்தல் என்பதானது, அந் நாட்டை விட்டு உடனடியாக வெளியேற்றப்படுதல் என்றே அங்கு அர்த்தப்படுகின்றது. அனேகமான தொழில் எசமானர்கள் தங்களின் வீட்டு பணிப்பெண்களுடைய கடவுச் சீட்டுக்கள் மற்றும் தொழில் அனுமதிப் பத்திரங்களை பறிமுதல் செய்து வைத்துக்கொள்ளுகின்றனர். அதன் அர்த்தம் யாதெனில் கொடுமையான நிலையிலிருந்து தப்பிச் செல்லும் பெண்கள் அல்லது இளம் பெண்கள் ஒன்றில் கைது செய்யப்படுவதற்கு அல்லது குடிவரவுத் தடுத்து வைப்புக்களுக்கு (immigration detentions) முகம் கொடுத்தே ஆக வேண்டும், என்பதாகும். நாங்கள் நேர்காணல் செய்த சகல வீட்டுப் பணிப்பெண்களிடமிருந்து கடவுச் சீட்டுக்களும் தொழில் அனுமதிப் பத்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டேயுள்ளன. நாம் நேர்காணல் செய்த சகல வீட்டுப் பணிப்பெண்களினதும் கடவுச் சீட்டுக்கள் தொழில் எசமானர்கள் வசம் இருப்பதோடு அனேகமான சந்தர்ப்பங்களில் சவுதி அதிகாரிகள் மற்றும் தூதுவராலய அதிகாரிகளின் தலையீடுகளின் பின்னரும் கூட அவர்கள் அதை கொடுக்க மறுத்துள்ளனர். அதேவேளை சில எசமானர்கள், வீட்டுப் பணிப்பெண்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை கொடுப்பதற்கோ பெற்றுக்கொள்வதற்கோ, அயலவர்களுடன் கதைப்பதற்கோ, வேலை செய்யும் இடத்திலிருந்து சுதந்திரமாக வெளியேறுவதற்கோ அனுமதிகளை கட்டுப்படுத்தியுள்ளனர். ஹியுமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்புடன் கலந்துரையாடிய பெரும்பாலான வீட்டுப்பணிப்பெண்கள் கூறியது யாதெனில், தொழில் எசமானர்கள் வீட்டில் இல்லாத பொழுது தம்மை வேலை செய்யும் இடத்திற்குள் வைத்து வெளியே பூட்டிவிட்டு செல்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் படுக்கையறை அல்லது குளியல் அறைக்குள் நாட்கணக்கில் தாங்கள் பூட்டிவைக்கப்பட்டிருந்ததாகவும் சிலர் கூறினர்.

## மிக நலிவான பரிகார செயல்முறைகள்

சவுதி அரசாங்கத்திற்கும் மற்றும் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் ஒவ்வொரு வருடமும் வீட்டுப் பணிப்பெண்களிடமிருந்து ஆயிரக் கணக்கான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. எமது ஆய்வுகளின் படி, பெரும்பாலான வீட்டுப் பணிப்பெண்களின் பிரச்சினைகள் அறிக்கையிடப்படாமல் இருப்பதற்கு காரணம், அவர்கள் தனியார் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதும், தமது சுய விருப்பத்திற்கு ஏற்ப பணியாளர்களை திருப்பி அனுப்புவதற்கு தொழில் எசமானர்களுக்குள்ள அதிகாரங்கள், மற்றும் அவர்கள் உத்தியோகபூர்வமாக உதவி கோருவதற்கான மிகக் குறைந்த ஊக்குவிப்புடன் கூடிய நலிவாக இயங்குகின்ற பரிகார செயல்முறை என்பதுமே ஆகும்.

சவுதி அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை எடுத்துக் கொண்டால், தொழில் சுரண்டல் மற்றும் வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிராக நிகழும் குற்றவியல் ரீதியான அத்துமீறல்களுக்கான பிரதிபலிப்பானது அக்கணத்தோடு முடிந்து விடுகின்றது. சில வீட்டுப் பணிப்பெண்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய சம்பளங்களை அறவிட்டுக் கொண்டு தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கு சவுதி அதிகாரிகள் உதவி செய்யும் அதேவேளை, ஏனைய பல சந்தர்ப்பங்களில் அப்பணிப்பெண்களை மீண்டும் அதே மோசமான இடங்களுக்குத் திருப்பி அனுப்புதல், மற்றும் தொழில் எசமானர்களினால் முன்வைக்கப்படும் எதிர் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துதல், அல்லது எந்தவிதத்திலும் நியாயமில்லாத இணக்கப்பாடொன்றிற்கு தொழில் எசமானரையும் பணியாளர்களையும் இணங்கச் செய்கின்றனர். பேரம்பேசுதலில் இருக்கும் அதிகார பாரபற்சத்தின் காரணமாக பெரும்பாலான இணக்கப்பாடுகளில் வீட்டுப் பணிப்பெண்கள் தமது மொத்த சம்பளங்கள் இல்லாமலோ அல்லது தம்மீது மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களுக்கு தகுந்த பரிகாரங்கள் இல்லாமலோ தம் நாடுகளுக்கு திரும்பிச் செல்லுகின்றனர்.

தமது தொழில் எசமானர்களுடன் நீண்டு செல்லும் சம்பள சர்ச்சைகள் இருக்கும் வீட்டுப் பணிப்பெண்களுக்கு அவசியமான, வெளியேற்ற வீசா, மீளத் திரும்பிச் செல்வதற்கான பிரயாணச் சீட்டு, மற்றும் அடையாள ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கென, சமூக விவகார அமைச்சினால் ரியாத்தில் ஓர் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. வீட்டுப் பணிப்பெண்களுக்கு குடியகல்வு மற்றும் அவர்களின் தொழில் பிரச்சினைகள் என்பவற்றை தீர்க்கும் செயல்முறையை வழங்குகின்ற விடயத்தில் இது குறிப்பிடத்தக்க முன்னோக்கிய நடவடிக்கை எனக்கூறலாம். எவ்வாறாயினும், இச்செயற்பாட்டின் பல்வேறு விடயங்கள் இங்கு கவனிக்கப்பட வேண்டியன. வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்ச்சியாகவே கொடுப்பனவுகள் தொடர்பாக நியாயமற்ற இணக்கப்பாட்டிற்கு வரவேண்டி இருப்பதோடு தமது வழக்குகள் தொடர்பாக மிகக் குறைந்த தகவல்களை பெற்றுக் கொள்வதுடன் மிகவும் சன நெருக்கடியான பாதுகாப்பு தங்குமிடங்களில் மாதக் கணக்கில் தங்கி நிற்கவேண்டி இருக்கின்றது.

குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்கள் சவுதி அரேபியாவில் உள்ள குற்றவியல் சட்டத்திற்கு முகம் கொடுக்கின்ற பொழுது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடுகின்றது. மொழிப்பெயர்ப்பாளரை பெற்றுக் கொள்ளுதல், சட்ட உதவியை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தமது தூதரகங்களோடு தொடர்பு கொள்ளுதல் என்னும் விடயங்களில் சமத்துவமற்ற அல்லது காலதாமதப்படுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களை மூடிமறைக்க தொழில் எசமானர்களால்

சுமத்தப்படுகின்ற திருட்டு, சூனியம் செய்தல் தொடர்பான பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கும் முகம் கொடுக்கின்றனர். உறவினரல்லாத ஆண் ஒருவருடன் விருப்பத்தின் பேரில் நடக்கின்ற உறவாடல், மற்றும் பாலியல் உறவுகளை கடுமையான ஒழுக்கக் குற்றச்செயல்களாக கருதி மோசமான தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். பாலியல் வன்முறை, மற்றும் பாலியல் ரீதியான இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட வீட்டுப் பணிப்பெண்கள்கூட அங்குள்ள மிகக் கட்டுப்பாடான சகாரியா (Sharia) சாட்சியத்தராதர முறைப்படி அவற்றை நிரூபிக்க முடியாவிட்டால், அவர்கள் தகாத உறவில் ஈடுபட்டவர்கள் என்னும் ஒழுக்கக் குற்றத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்படுகின்றனர். இந்த வகையான குற்றச்செயல்களுக்கு தண்டனைகளாக சிறையில் அடைத்தல், சாட்டையால் அடித்தல் இன்னும் சில சம்பவங்களில் மரண தண்டனை வழங்குதல் என்பதும் நிகழ்கின்றது.

வீட்டுப் பணிப்பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படுகின்ற அத்துமீறல்கள் தொடர்பாக வழக்குகளை நடத்திச் செல்வதற்கு சவுதி அரேபியாவில் ஒரு குறிப்பான விசாரணை நடைமுறைகள் கிடையாது என தூதுவராலய அதிகாரிகள் முறைப்பாடு செய்கின்றனர். பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு தூதுவராலய அதிகாரி பின்வருமாறு கூறினார் ‘‘இங்கு எந்த ஒரு தெளிவான முறையும் கிடையாது ரியாதுக்கு வெளியே உள்ள பெண்களுக்கான முறை இதுதான் என நாங்கள் கூற முடியாது. காரணம் ஒவ்வொன்றும் தனித்துவமான வழக்குகளே சரியானதொரு விசாரணை முறையில்லாததினால் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு தீர்வுகளே கொடுக்கப்படுகின்றன.’’

அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் தொடர்பாக பயனுள்ள பரிகாரங்கள் வழங்கக்கூடிய செயல்முறைகள் உள்ளூரில் இல்லாததன் காரணமாக, தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் தூதரகங்கள் தத்தமது நாட்டவர்களின் உரிமைகள் தொடர்பாக குரல் கொடுப்பது அவர்களுக்கான பாதுகாப்பு தங்குமிடங்களை ஒழுங்கு செய்வது, சட்ட உதவிகளை வழங்குவது மற்றும் தொழில் எசமானர்களால் வழங்கப்படாத சம்பளங்களை மீள அறவிடுவது என்பதில் மிகத் தீர்மானகரமான பணியை ஆற்றுகின்றன. இந்தோனேஷியா, இலங்கை, பிலிபைன்ஸ், நேபாளம் மற்றும் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் தூதரகங்களினால் வழங்கப்படும் சேவைகள் பல்வேறு வகைப்பட்டதாகவும் பல மட்டத்திலும் அமைந்துள்ளன. அனேகமான இத்தூதரகங்கள் மிகக் குறைந்த நிதி மற்றும் ஊழியர் வளங்களுடன் பெருந்தொகையான முறைப்பாடுகளை கையாளுவதற்கு கடுமையாக முயற்சிக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் இத்தூதரகங்கள் முக்கியமான பல உதவிகளை செய்யக்கூடியதாக இருந்தாலும், தமது வழக்குகள் தொடர்பாக நீண்ட காலம் காத்திருக்க வேண்டி இருப்பதாகவும் மிகச் சிறிய அளவு தகவல்களே தமக்கு கிடைப்பதாகவும் இத்தூதரகங்களை அணுகும் வீட்டுப் பணிப்பெண்கள் தெரிவிக்கின்றனர். இந்தோனேஷியா மற்றும் இலங்கைத் தூதரகங்களினால் நடத்தப்படும் பாதுகாப்பு தங்குமிடங்கள் போதிய சுகாதார வசதிகள் இன்றியும் மிக சன நெரிசல் உடையதாகவும் இருக்கின்றது. கணிசமான முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும் நேபாள தூதுவராலயத்தினால் பாதுகாப்பு தங்குமிடம் எதுவும் வழங்கப்படவில்லை.

இவ்வறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள இம்சைகள் மற்றும் அத்துமீறல்களின் பிரதிபலனாக தொழிலாளர்களை அனுப்பும் சில நாடுகள் தமது நாட்டுப் பெண்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்புவதை மீள் பரிசீலனை செய்யத் தீர்மானித்துள்ளன. அல்லது தடை செய்யும்படி கோரியுள்ளன. எவ்வாறாயினும் இத்தடை செய்தலின் மூலம் பெண்கள் சட்ட விரோதமான வழிமுறைகளினூடாக குடிபெயர்ந்து செல்ல முயற்சித்து இன்னும் மோசமான ஆபத்துகளுக்குள் விழுந்துள்ளமை மட்டுமே நிகழ்கின்றது என்பதையே

அனுபவங்கள் காட்டுகின்றன. மறுபுறமாக தொழில் வழங்குகின்ற, சவுதி அரேபியா மற்றும் ஏனைய நாடுகள் குடிபெயர்பவர்களின் மேல் தாம் தங்கி நிற்பதை குறைப்பதற்கு அல்லது அவர்களின் வருகையை கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாக கட்டுப்பாடுகளுடன் கூடிய குடிவரவு கொள்கைகளை அறிமுகப்படுத்த முயற்சிகள் எடுத்துள்ளன. மிகச் சிறப்பான உரிமைகளின் அடிப்படையிலான குடிபெயர்வுக் கொள்கையொன்றை உருவாக்கி அமுல்படுத்த வேண்டுமாயின் பாரிய பல்தரப்பு மற்றும் பிராந்திய ரீதியான கூட்டுறவு அவசியமாகும். தற்போது நிலவுகின்ற சமத்துவமற்ற பேரம் பேசும் திறனானது, தொழிலாளர்களை அனுப்பும் மற்றும் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களில் பலவீனமான போக்குகளையே காட்டுகின்றது. குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்களின் பிரச்சினைகளை கையாளுகின்ற விடயத்தில், கொழும்புச் செயற்பாடு, அபுதாபி விவாதம், குடிபெயர்வு மற்றும் அபிவிருத்தித் தொடர்பான பூகோள கூட்டமைப்பு என்பவற்றின் மூலம், குடிபெயர்வு விடயம் தொடர்பாக அரசாங்கங்கள் ஒருமுகப்பட்டு கூட்டான கலந்துரையாடல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும். இக்கூட்டங்களின் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுடன் இன்னும் நெருக்கமான தொடர்புகளை இறுக்கமாக கட்டியெழுப்புவதோடு, தற்போது நடைமுறையில் உள்ள மனித உரிமை ஒப்பந்தங்கள் மற்றும் குடிபெயர்வாளர்கள் தொடர்பான வழிகாட்டல்களுடன் இணைத்து செயற்படுத்த வேண்டும்.

## சவுதி அரேபிய அரசாங்கத்திற்கான முக்கிய பரிந்துரைகள்.

குடிபெயர்வாளருக்கு எதிராக நிகழும் அத்துமீறல் மற்றும் இம்சைகளை நிறுத்துவதற்கான திறப்பானது குடிபெயர்வை முடிவுக்கு கொண்டுவரும் செயற்பாட்டில் இல்லை, மாறாக மிகப் பொருத்தமான பாதுகாப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் மற்றும் சரியான தகவல்களை பெற்றுக்கொண்டு பணிப்பெண்கள் குடிபெயர்வதுடன் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதிலுமே அமைந்துள்ளது. பணிப்பெண்கள் மீது நிகழ்த்தப்படும் அனேக அத்துமீறல்கள் நிறுத்தப்படக் கூடியவையே. அவை நிகழுகின்ற பொழுது குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்க்கு அரசாங்கம் எடுக்கக்கூடிய தெளிவான நடைமுறைகள் இருக்கின்றன.

சவுதி அரேபியா அரசாங்கத்திற்கு ஹியுமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்பு முன்வைக்கும் பரிந்துரைகள்.

- பணியாளர்களின் வீசாக்களை தனிநபர்களிடம் பிணைத்து வைக்கும் வழிமுறையை இனி இல்லாமல் செய்வதுடன், அவர்களின் விருப்பத்திற்கேற்ப தொழிலை மாற்றுவதற்கோ அல்லது தொழிலிருந்து விலகிச் செல்வதற்கோ உரிய வகையில் வீசா அனுசரணை முறையில் சீர்த்திருத்தம் செய்ய வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண்களையும் உள்ளடக்கக்கூடியதாக தொழிலாளர் பாதுகாப்பு முறையை விரிவாக்கி 2005ம் ஆண்டு தொழிலாளர் சட்டக் கோவையுடன் அவ்விணைப்பையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போல அவ்வுரிமைகள் அவர்களுக்கும் சமனாக செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதோடு அவற்றை செயல்படுத்துவதற்கான தெளிவான காலவரையறையையும் அதற்கான பொறிமுறைகளையும் உருவாக்குதல் வேண்டும்.

- பணிப்பெண்கள் வேலைசெய்யும் சூழ்நிலைமைகளை கண்காணிப்பதற்க்கும், அவர்களை விடுவிப்பதற்கான வசதிகளைச் செய்வதற்கும், அவர்களுக்கு வழங்கப்படாத சம்பள அறவீடுகளை உறுதி செய்வதற்கும், உரிய காலத்தில் மீண்டும் சொந்த நாடுகளுக்கு செல்வதற்கான ஒழுங்குகளை செய்வதற்கும்

அவசியமான விதத்தில் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளுடன் கூட்டாக பணியாற்றல் வேண்டும்.

- சமூக விவகார அமைச்சினூடாக நடத்தப்படுகின்ற வீட்டுப் பணிப்பெண்களுக்கான மையங்களுக்கான வசதிகள் மற்றும் சட்ட ஒழுக்கக் கோவைகளில் முன்னேற்றங்களைச் செய்தல்.

- தடுத்து வைக்கப்பட்டுள்ள பணியாளர்கள் தொடர்பாக அவர்களை அனுப்பிய நாடுகளுக்கு அறியத்தருவது, இம்சைகள் மற்றும் அத்துமீறல்களிலிருந்து மீட்டெடுத்தவர்களுக்கான மருத்துவ வசதிகள், ஆலோசனைகள் மற்றும் சட்ட உதவிகள் உட்பட பாதுகாப்பு தங்குமிட வசதிகளை உருவாக்குவதற்காக அந்தந்த நாடுகளுடன் கூட்டாக செயற்பட வேண்டும்.

- தொழிலாளர்களை சேர்த்தனுப்பும் ஏஜென்சிகள் மற்றும் சேர்க்கும் நடைமுறைகள் என்பவற்றை தொடர்ச்சியாகவும் சுதந்திரமாகவும் கண்காணிப்பது உட்பட முன்னறிவித்தல் இன்றி செய்யும் பரிசோதனைகள் உள்ளடங்கிய செயல்முறைகளை நடைமுறைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

## குடிபெயர்வாளர்களின் சொந்த நாட்டு அரசாங்கங்களுக்கு முன்வைக்கும் முக்கிய பரிந்துரைகள் (இந்தோனேஷியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளம் உட்பட)

- சவுதி அரேபியாவில் உள்ள தூதரகங்கள் மற்றும் உப தூதரகங்களில் நடத்தப்படும் வீட்டுப் பணிப்பெண்களுக்கான பாதுகாப்பு தங்குமிடங்களின் தரத்தையும், ஆலோசணை வழங்குதலையும், பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை உட்பட வழங்கும் சேவைகளையும் தரம் உயர்த்தல் வேண்டும்.

- முன்னறிவித்தலின்றி பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதன் மூலமும், முறைப்பாடுகளை கையாளுவதில் பயனளிக்கக்கூடிய வகையிலான செயல்முறைகளை உருவாக்குவதன் மூலமும், தொழிலாளர்களை சேர்த்துக் கொள்ளும் தரகர்களை கண்காணிப்பதுடன் அவர்களுக்கான ஒழுக்கக் கோவைகளையும் பலப்படுத்துதல் வேண்டும்.

- எதிர்காலத்தில் குடிபெயரும் வீட்டுப் பணிப்பெண்களுக்கான அறிவுருத்தல்களை அதிகரிக்கச் செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை பரவலாக்குவதோடு தொழிலுக்கு செல்வதற்கான முன் - பயிற்சி வேலைத்திட்டங்களையும் தரமுயர்த்தல் வேண்டும்.

விரிவான பரிந்துரைகள் தொடர்பான முழுமையான பட்டியல் ஒன்று இவ்வறிக்கையின் இறுதியில் காணப்படுகின்றது.

## XII. விரிவான பரிந்துரைகள்

சமூக விவகாரங்கள் தொடர்பான அமைச்சினால் பாதுகாப்புத் தங்குமிட வசதிகளை நிறுவுவதன் மூலமும், தொழிலாளர் சட்டக்கோவையில் சீர்திருத்தங்களை கொண்டு வருவதன் மூலமும் மற்றும் வீட்டுப் பணிப்பெண்களை சிறந்தவகையில் நடத்த வேண்டும் என்று, அரச பணி மட்டத்திலான பொதுச்சேவை செய்திகளின் (public service messages) மூலம் சவுதி அரசாங்கம் வீட்டுப் பணிப்பெண்களுக்கெதிராக அத்துமீறல்கள் தொடர்பாக ஒரு குறிப்பிடத்தக்க அவதானிப்பை செலுத்தி உள்ளது. ஆனாலும் இன்னும் அதிக ஒழுங்கு முறையான சமூக மாற்றங்கள் அவசியப்படுகின்றது.

குடிபெயர் பெண்களுக்கு அவர்களின் தொழில் தொடர்பாக தெளிவானதும் முழுமையானதுமான தகவல்களை பெற்றுக் கொள்வதையும், அவர்களுக்கு புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் அவர்களின் ஒப்பந்தப் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும், அவசியப்பட்டால் உதவிக்கான வாய்ப்புக்களை பெறுவதையும் உறுதியளிக்கக்கூடியதான தீர்மானகரமான காரணியான, தொழிலாளர்களை அனுப்பும் நாடுகள் மற்றும் சவுதி அரேபிய அரசாங்கம் ஆகிய இரு தரப்பினரும் இணைந்து பணிப்பெண்களை வேலைக்குச் சேர்க்கும் முறைமையில் சீர்திருத்தங்களை செய்ய வேண்டும். தொழில் மற்றும் குடிவரவு சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவருதலும் பிரதான நடவடிக்கையாகும். தற்போதுள்ள கபாலா முறைமையும், தொழில் சட்டங்களிலிருந்து வீட்டுப் பணிப்பெண்களை விலத்தி வைத்திருப்பதும் வீட்டுப் பணிப்பெண்களை சுரண்டலுக்குள்ளாகும் நிலைக்கு தள்ளிவிடுகின்றது. இறுதியாக, சவுதி அரசாங்கமானது குற்றவியல் சட்ட முறையிலும், தொழில் சர்ச்சை தீர்ப்பு நடைமுறைகளிலும், தொழிலாளர்களை திருப்பி அனுப்பும் முறைமையிலும் பாரிய முன்னேற்றங்களை கொண்டு வந்து அவற்றை அமுல்படுத்த வேண்டும். அதன் மூலம் அத்துமீறல்களுக்கு எதிர்த்து முகம் கொடுக்க முடியாத துரதிஷ்டவசமான வீட்டு பணிப்பெண்களுக்கு நீதிகிடைக்கச் செய்ய முடியும்.

### சவுதி அரசாங்கத்திற்கு

*வீட்டுப் பணிப்பெண்களுக்கு சமத்துவமானதும் பரந்ததுமான சட்டப்பாதுகாப்பும், அவ்வாறான பாதுகாப்பு முறை ஒன்றை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான குறிப்பிட்ட கால எல்லை நிர்ணயத்தையும் தீர்மானித்தல் வேண்டும்.*

- வீட்டுப் பணிப்பெண்களுக்கான பாதுகாப்புக்களை பரவலாக்குவதற்காகவும் விரிவாக்குவதற்காகவும் தொழில் சட்டத்தில் முன்மொழியப்பட்ட இணைப்புக்களை சேர்த்துக்கொள்ளல் வேண்டும். வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை, சம்பளக் கொடுப்பனவு, மேலதிக வேலை நேர கொடுப்பனவுகளில் நிகழும் குறைப்புக்கள், வாராந்த ஓய்வு நாள், சம்பளத்துடனான விடுமுறை மற்றும் தொழிலாளர்களுக்கான நட்ட ஈட்டை நிர்ணயம் செய்கின்ற சரத்துக்கள் உள்ளடங்கலாக ஏனைய பணியாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு முறைகளை இச்சீர்த்திருத்தங்களுக்கூடாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- முன்மொழியப்பட்ட இணைப்பு தொழில் நீதிமன்றத்தின் மூலம் சட்டமயமாக்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

- சம்பளங்கள் தொடர்பான சர்ச்சைகள் மற்றும் பணியாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வீட்டுப் பணியாளர்கள் தொழில் நீதிமன்றங்களுக்கு செல்வதற்குள்ள வசதி வாய்ப்புக்களை தரமுயர்த்தல் வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண் ஒருவரை வேலைக்கமர்த்துகின்ற பொழுது சவுதி தொழில் எசமானர் ஒருவருக்கு இருக்கக் கூடிய சட்ட உரித்துகள் மற்றும் அவரின் கடப்பாடுகள் என்பன பற்றியும், கலாசார வேறுபாடு காரணமாக தொடர்பாடலின் போது ஏற்படக்கூடிய தவறான புரிதல்களை கையாளுவது, மற்றும் பிரச்சினைகள் எழும் போது தொடர்பு கொள்ளக் கூடிய வளங்கள் என்பவை உள்ளடங்கிய கட்டாய அறிமுக அறிவுருத்தல் நிகழ்வொன்றை (mandatory orientation) தொழில் எசமானருக்கு நடத்துதல் வேண்டும்.

- வீட்டு பணிப்பெண் ஒருவர் புதிதாக வேலைக்கு வந்து சேரும் பொழுது கட்டாய அறிமுக அறிவுறுத்தல்கள் நிகழ்வொன்றை நடைமுறைப்படுத்துவதோடு அவர்களின் சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளையும் தெரியப்படுத்தல் வேண்டும். அவர்களுக்கு பிரச்சினைகள் வரும்போது தேவையேற்படின் எங்கு உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம், தமது வங்கிக் கணக்குகளை பாவிக்கக்கூடிய வகையான காசுக்கணக்குத் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ளும் பயிற்சி, தமது குடும்பங்களோடு எவ்வாறு தொடர்புகளை வைத்திருக்கலாம் என்பது பற்றிய தகவல்கள், அவர்களின் நாட்டுத் தூதரக அதிகாரிகளுடனான அறிமுகங்கள் மற்றும் சவுதி சட்டங்கள் தொடர்பான விளக்கங்கள், அதாவது தமது சொந்த நாடுகளில் அனுமதிக்கப்படுகின்ற ஆனால் சவுதி அரேபியாவில் தண்டனைக்குள்ளாக்கக் கூடிய விடயங்கள் என்னும் தகவல்கள் இவ்வறிமுக அறிவுருத்தல் நிகழ்வுக்குள் உள்ளடக்க வேண்டும்.

*குடிபெயர் தொழிலாளரின் சட்டபூர்வ நிலைமையையும், தொழில் எசமானர்களை மாற்றுவதற்கு அவர்களுக்கிருக்கும் திறன், மற்றும் அவர்களின் எசமானர்களிடமிருந்து விடுபட்டு சவுதி அரேபியாவிலிருந்து வெளியேறுதல் என்பவற்றை இணைக்கும் வீசா அனுசரணை சட்டங்களில் சீர்த்திருத்தங்களை கொண்டு வருதல் வேண்டும்.*

- தற்காலிக தொழில் வீசாக்கள் குறிப்பிட்ட தொழில் எசமானரை நிர்ணயிக்கும் அடிப்படையில் அமையாத வகையில் கபாலா அனுசரணை முறையை சீர்திருத்த வேண்டும் அல்லது அதை இல்லாமல் செய்தல் வேண்டும். தமது முன்னைய தொழில் எசமானரின் அனுமதியின்றியோ, தமது சட்டபூர்வ நிலையை இழக்காமலோ பணியாளர்கள் தமது தொழிலை மாற்றிக் கொள்வதற்கான தகைமையை உறுதிப்படுத்தல் வேண்டும்.

- குடிபெயர் வீட்டுப் பணிப் பெண்கள் தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கான ‘‘வெளியேற்ற வீசா’’க்களைப் பெற்றுக்கொள்வதற்கு தமது அனுசரணையாளரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் முறையை இல்லாதொழிக்க வேண்டும்.

- தற்போது முன்மொழியப்பட்டுள்ளபடி வெளிநாட்டிற்குச் செல்லும் பணியாளர்களின் அனுசரணை முறைகளை வேலைக்கமர்த்தும் ஏஜன்சிகள் பொறுப்பெடுக்குமானால் அவற்றை கண்காணிப்பதற்கான அமைப்பொன்றை உருவாக்குதல் வேண்டும். இவ்வமைப்பானது, தவறான செயற்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்தல், அதற்கான தண்டனைகளை நியமித்தல், தொழில் அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியற்றதாக்குதல், தகுந்த அபராதங்களை விதித்தல் மற்றும்

குற்றவியல் நடவடிக்கைகளுக்கு பரிந்துரைத்தல் போன்ற அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். தொழிலாளர்களை அனுப்பும் நாடுகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் உட்பட சகல தரப்பினரையும் உள்ளடக்கியதான சபையொன்றை நியமித்தல் வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண்கள் காணாமல் போகும்போது அல்லது அவர்களின் தொழில் எசமானர்களை அடையாளம்காண முடியாதிருக்கும்போது, தொழில் எசமானர்களை கண்டுபிடிப்பதற்கு வசதியாக ஓர் ஒழுங்கான புள்ளிவிபரக் கோவையை தொழில் எசமானர்கள் தெடர்பாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

- சவுதி அரேபியாவில் இறந்துபோகும் பணியாளர்களின் உடல்களை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பும் அதிகாரங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை இலகுபடுத்தல் வேண்டும்.

*ஒவ்வொரு நாடுளைச் சேர்ந்த நபர்களை தடுத்து வைக்கும்போது தொழிலாளர்களை அனுப்பும் அந்தந்த நாடுகளுடன் இணக்கப்பாட்டுடன் செயல்பட வேண்டும்.*

- தடுத்துவைக்கப்பட்டவர்கள் தொடர்பாக கிரிமினல் வழக்குகள் நடத்தப்படுகின்ற பொழுது அவ்வழக்கு விசாரணை திகதிகள் தொடர்பாக தூதர உறவுகள் தொடர்பான வியன்னா ஒப்பந்தத்தின்படி உரியகாலத்தில் அறியத்தரல் வேண்டும்.

- தத்தமது நாட்டின் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு குடிபெயர் பணியாளர்களுக்கு உள்ள உரிமை தொடர்பாக உடனடியாக அவர்களுக்கு அறியத்தருவதோடு அவ்வாறு தொடர்பு கொள்வதற்கு தேவையான வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்.

- அவர்களது தொழில் எசமானர்களின் வீடுகளில் அடைத்து வைக்கப்பட்டு அவர்களின் விருப்பத்திற்கு மாறாக தொடர்ந்து வேலைசெய்வதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ள குடிபெயர் பணியாளர்களை விடுவிப்பதற்காக தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளுடன் இணக்கப்பாட்டுடன் செயல்படல் வேண்டும். அவ்வாறு விடுவிப்புகளுக்கு அதிகாரம் வழங்குகின்ற செயல்முறைகளை இலகுபடுத்தல் வேண்டும்.

*சமூகவிவகார அமைச்சினால் வீட்டுப் பணிப் பெண்களுக்காக நடாத்தப்படும் நிலையங்களில், வசதி வாய்ப்புக்களையும் மற்றும் அவற்றின் சட்ட ஒழுங்கு கோவைகளையும் தரம் உயர்த்தல் வேண்டும்.*

- இந்நிலையங்களில் தங்கியிருக்கும் பெண்களுக்கு தமது கும்பங்களுக்கும் தூதரக காரியாலங்களுக்கும் தொடர்பு கொண்டு கதைப்பதற்கான வசதி, வெளியே செல்வதற்கும் கைத் தொலைபேசிகளை வைத்திருப்பது உட்பட நடமாடுதல் மற்றும் தொடர்பாடல் செய்வதற்கும் பாரிய சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

- கேள்விகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் இனங்காணுதல் என்பவற்றோடு தொடர்புள்ள, விடயங்களில் சவுதி அதிகாரிகள் மற்றும் தொழிலார்களை அனுப்பும் நாடுகளின் தூதரக காரியாலங்களுடன் தொடர்புகளைப் பரிமாறிக்கொள்ளும் வாய்ப்புக்களை இலகுபடுத்துவதற்காக சகல தகவல்கள் ஆவணங்கள் என்பவற்றை கணனி மயப்படுத்தல் வேண்டும். அத்துமீறல்களில் ஈடுபடும் தொழில் எசமானர்கள் மற்றும் தொழிலாளர்களைச் சேர்க்கும் ஏஜென்டுகள்

தொடர்பாக பட்டியல் ஒன்றை (black list) தயாரித்து அவற்றை தமக்கிடையே பரிமாறிக்கொள்ளல் வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண்களின் வழக்கு அல்லது அது தொடர்பான எந்தவொரு சந்திப்பு அல்லது நேர்காணல் என்பவற்றுக்கு தொழில் ரீதியான மொழிபெயர்பை வழங்கல் வேண்டும். வீட்டுப் பணிப்பெண்கள் பேசுகின்ற மொழியில் புலமை வாய்ந்த அதிகாரிகள் வழங்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண் ஒருவர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய சகல பிரச்சினைகளையும் அவர்கள் நிலையத்திற்கு வரும்பொழுதே அவற்றை விரிவாக அறிந்து பதிவு செய்யக்கூடிய மாதிரிப் படிவங்ளை உருவாக்க வேண்டும்.

- பேரம் பேசுவதற்கான அதிகாரத்தில் இருக்கும் பாரிய சமத்துவம் அற்ற நிலமையை இல்லாது ஒழிப்பதற்காக, வழங்கப்படாத சம்பளங்கள் மற்றும் மீள நாடு திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டு என்பதற்கான நிதியங்களை உருவாக்கும் விடயத்தையும், மற்றும் வெளியேற்ற விசாவை பெறுவதற்கு தொழில் எசமானர்களின் அனுமதியைப் பெறுவது என்னும் விடயத்தையும் ஒன்றில் இருந்து ஒன்று வேறாக்க வேண்டும்.

- இவர்களின் பிரச்சினைகள் தொடர்பான நிலமை மற்றும் அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய மாற்று வழிகள் என்பவை தொடர்பாக வீட்டுப் பணிப்பெண்களுக்கு அறியத்தரவேண்டும்.

*வீட்டுப் பணிப்பெண்களை நடத்துகின்ற விடயத்தில் நடைமுறையில் உள்ள தேசிய சட்டங்ளை மீறுகின்ற தொழில் எசமானர்களுக்கும் தொழில் ஏஜென்டுகளுக்கும் கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டும்.*

- வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிரான உடல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான இம்சைகளை மேற்கொள்ளுகின்ற குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, குற்றங்களை நிரூபித்து, தண்டனைகளை வழங்கல் வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண்கள் மீண்டும் தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்லக்கூடிய வகையிலும் நீண்ட காலம் பாதுகாப்பு தங்குமிட நிலையத்தில் தங்கியிருப்பதை தவிர்ப்பது போன்ற காரணங்களில் தமது சட்ட அதிகாரத்தை (power of attorney) தமது நாட்டின் தூதரகங்களிடம் வழங்குவதற்கு இடமளித்தல் வேண்டும்.

- தற்போது நடைமுறையில் உள்ள தேசிய சட்டங்களை மீறுகின்ற மற்றும் தொழில் உரிமைகளில் உள்ள அத்துமீறல்களை செய்கின்ற குற்றவாளிகளை விசாரணைசெய்து, சட்ட நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு தண்டனை வழங்கல் வேண்டும்.

- இம்சைகளிலும் அத்துமீறல்களிலும் ஈடுபடும் தொழில் எசமானர்கள் எதிர்காலத்தில் வீட்டுப் பணிப்பெண்களை அமர்த்திக்கொள்ள முடியாது என்பதற்கும் மேலாக அவர்களுக்கு தண்டனைகளை அதிகரிக்க வேண்டும்.

- வீட்டுப் பணிப்பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இம்சைகள் மற்றும் அத்துமீறல்களை இனங்கண்டு கொள்வதற்காக விசாரணைகளை மேற்கொள்ளும் பயிற்சி ஒன்றையும், அவ்வாறான சூழ்நிலைமைகளில் எவ்வாறு தமது பிரதிபலிப்புக்களை காட்டவேண்டும் என்பது பற்றியும், தகுந்த தொடர்புகளை

மேற்கொள்வது எவ்வாறு என்பது பற்றியும், சட்ட ஒழுக்க கோவைகள் பற்றியும் பொலீஸ் அதிகாரிகளுக்கு பயிற்சி ஒன்றை வழங்குதல் வேண்டும். பணிப் பெண்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை மீண்டும் அத்துமீறல்களில் ஈடுபடுத்துகின்ற தொழில் எசமானர்களிடம் திருப்பி அனுப்பாமல் இருப்பதன் முக்கியத்துவம் பற்றி பொலீசாருக்கும் குடிவரவு அதிகாரிகளுக்கும் சரியான அறிவூட்டலை மேற்கொள்ளல் வேண்டும். அதேவேளை தொழில் எசமானர்கள், தொழில் ஏஜென்டுகள் என்போருக்கு எதிராக குற்றச் சாட்டுக்களை முன்வைக்கும்போது அதற்கான சகல ஒழுங்கு விதிகளையும் அவர்கள் நன்கு அறிந்திருப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

- பாலியல் பலாத்காரத்தை நிரூபிப்பதை கடுமையாக்குகின்ற சாட்சி முறையில் சீர்திருத்தத்தை கொண்டுவருதல் வேண்டும். வயது வந்தோர் விருப்பத்திற்கு ஏற்ப மேற்கொள்ளும் பாலியல் உறவுகள், சூனியம் செய்தல் அல்லது மந்திர தந்திரச் செயற்பாடுகள் (black magic) எனக்கூறப்படுபவை தொடர்பாக வழங்கப்படுகின்ற தண்டனைகள் மற்றும் அவை தொடர்பான குற்றவியல் விசாரணை நடைமுறைகள் என்பவற்றிலும் சீர்திருத்தங்களை கொண்டுவருதல் வேண்டும்.

*தொழிலாளர்களை சேர்க்கும் ஏஜென்சிகளை கண்காணிப்பதற்கான சட்ட ஒழுங்குகளை கடுமையாக்குதல் வேண்டும்.*

- பரிசோதகர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் உட்பட தொழிலாளர்களைச் சேர்க்கும் ஏஜன்சிகளை கண்காணிக்கும் தொழில் அமைச்சின் செயற்பாட்டை தரம் உயர்த்துதல் வேண்டும்.
- தொழிலாளர்களைச் சேர்த்தல், இடமாற்றம் செய்தல், தொழிலாளர்கள்/ எசமானர் சச்சரவுகளைக் கையாழுதல் மற்றும் சவுதி அதிகாரிகளிடம் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் தூதரகங்களுக்கு அவற்றை அனுப்பும் சட்ட ஒழுங்கு கோவைகளை பலப்படுத்தி அவற்றை உத்தியோக பூர்வமாக்கவேண்டும்.
- ஒரு தொழில் எசமானர் எவ்வித அத்துமீறல்களிலும் ஈடுபடாதபோது ஒரு வீட்டுப் பணிப்பெண் தமது குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே சேவையில் இருந்து நின்று விட்டால், தொழில் எசமானர்கள் இழக்க நேரிடும் தொழிலாளரை சேர்த்துக்கொள்ள செலவிட்ட கட்டணத்தொகையை அவர்கள் மீளப் பெறுவதற்கான காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாக கருத்தில் எடுக்க வேண்டும்.

*சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களுக்கு இணைவாக செயற்படுதல் வேண்டும்*

- சகல குடிபெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுவது தொடர்பான ஒப்பந்தத்தை (குடிபெயர் தொழிலாளர் ஒப்பந்தம்) மற்றும் சர்வதேச தொழிலாளர் ஒப்பந்தங்களையும் கட்டுப்பாடுகள் எதுவுமில்லாத வகையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒப்பந்த அமைப்பு அறிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும்.
- தொழில் எசமானர்கள், தொழிலாளர்களின் கடவுச் சீட்டுக்களை பறிமுதல் செய்யும் நடைமுறைகளை இல்லாமல் செய்வது தொடர்பாகவும் மற்றும் இனத்துவ ரீதியான வேறுபாடுகளை அடியோடு இல்லாதொழிப்பது பற்றியுமான கமிட்டி, மற்றும் தடுத்து வைக்கப்படும் குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்பாக தூதரகங்களின் பாதுகாப்புத் தலையீடு தொடர்பான இம்சைகளுக்கு எதிரான கமிட்டி ஆகிய

இரண்டும் ஏற்கனவே தற்போது வெளியிட்டுள்ள பரிந்துரைகளுடன் இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

- பெண்களுக்கெதிரான சகலவிதமான கீழ்மைப்படுத்தல்களை இல்லாமல் செய்வது தொடர்பான சாசனம் மற்றும் சிறார் உரிமைகள் தொடர்பான சாசனத்தின் மீது கொண்டுவரப்படும் பரவலான கட்டுப்பாடுகளை இல்லாமல் செய்தல் வேண்டும்.
- குடிபெயர் தொழிலாளர்களின் நிலமைகளை கணிப்பீடு செய்வதற்காக, குடிபெயர்வாளர் மனித உரிமைகள் தொடர்பாக பணியாற்றும் நபர்கள், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் நாட்டுக்குள் வருவதற்கு அழைப்புக்களை விடுத்தல் வேண்டும்.

## குடிபெயர்வாளர்களின் சொந்த நாட்டு அரசாங்கங்களுக்கு (இந்தோனேசியா, இலங்கை, பிலிப்பைன்ஸ, மற்றும் நேபாளம் உட்பட)

- தொழிலாளரை சேர்க்கும் ஏஜென்டுகள் தொடர்பான சட்டதிட்டங்களை பலப்படுத்தல் வேண்டும்.
- தேசிய தரகர்கள் மற்றும் உப ஏஜென்டுகள் ஆகியோரினால் மேற்கொள்ளப்படும் அதிக கட்டண அறவீடுகளையும் ஏமாற்றல்களையும் குறைக்கும் வகையில், கட்டணங்கள் மற்றும் சேர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பான தராதரங்கள் என்பவற்றைத் தெளிவாக வரையறுத்து அறிவிக்க வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறுகின்ற உப ஏஜென்டுகளுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- தாங்கள் ஏஜென்டுகளுக்கு எவ்வளவு கட்டணத்தை வழங்கினோம் என்பதை குடிபெயர்வதற்கு முன்னரே வீட்டுப் பணிப்பெண்கள் அரசாங்கத்திற்கு அறியத்தரக் கூடியதாக ஒரு ஒழுங்கான வழிமுறையை உருவாக்குதல் வேண்டும்.
- தொழில் செய்வதற்காகச் சென்றுள்ள நாடுகளில் தமது நாட்டுப் பிரஜைகள் தொடர்பான முறைப்பாடுகளை மிகக் காத்திரமாக தொகுத்து விசாரணை செய்தல் வேண்டும். தொழில் செய்யும் நாடுகளிலும், மற்றும் தூதரகங்களிலும் மற்றும் திரும்பி வரும்பொழுதும் இவற்றை முறையாகப் பதிவு செய்வதற்கும் வீட்டுப் பணிப் பெண்களுக்கு ஒழுங்குகள் செய்து கொடுத்தல் வேண்டும்.

*சவுதி அரேபியாவிலுள்ள தூதரகங்களிலும் உப தூதரக காரியாலயங்களிலும் குடிபெயர் வீட்டுப் பணிப் பெண்களுக்கான சேவைகளை அதிகரிக்க வேண்டும்.*

- நாங்கள் ஆவணப்படுத்தியுள்ள தொழில் எசமானர்கள் பட்டியல் மற்றும் ஏஜென்டுகளின் காரியாலயங்கள் பற்றிய தகவல்களை சவுதி அதிகாரிகளுடன் பரமாறிக்கொள்ள வேண்டும்.
- உதவிகளை எதிர்பார்க்கின்ற குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்களுக்கு குறிப்பாக சம்பளங்களை அறவிடுதல், குற்றம் சாட்டப்படுகின்ற அத்துமீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் சட்டத்தின் முன் நிறுத்துதல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்போது தமது உரிமைகளை அனுபவித்தல் என்பன போன்ற விடயங்களில் உதவிகளை வழங்குவதற்காக பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

- சவுதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டுள்ள சகல மட்டத்திலான ஊழியர்களுக்கும் வீட்டுப் பணிப்பெண்கள் தொடர்பான உரிமைகள் மற்றும் அவர்களுக்கு உதவுவது எவ்வாறு என்பது பற்றி கட்டாய பயிற்சியொன்றை அறிமுகம் செய்தல் வேண்டும். குடிபெயர் வீட்டுப் பணிப்பெண்களும் தூதரகங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய குடிமக்களே என்னும் கனதியான சமிக்ஞையை தூதுவர்கள் அனுப்புதல் வேண்டும். அத்துடன் வீட்டுப் பணிப் பெண்கள் செய்யும் பங்களிப்புக்களை சுட்டிக்காட்டி அவர்களை கௌரவிப்பதற்கான நிகழ்வுகளை நடத்த வேண்டும்.

- ஊழியர்களுக்கான பயிற்சிகள், மன அழுத்த ஆலோசணைகளை (trauma counseling) வழங்குதல், மற்றும் மருத்துவ வசதிகளை வழங்குதல் அதிக சன நெருக்கடியைக் குறைத்தல் போன்றவற்றினால் அவர்களின் பாதுகாப்பு தங்குமிடங்களின் தரத்தை உயர்த்துதல் வேண்டும்.

- தமக்கு தேவையான உதவிகளுக்காக ஏற்கனவே தூதரகங்களை தொடர்புகொண்டு வீட்டுப் பணிப்பெண்களின் நிவாரணங்கள் தொடர்பாக வருடாந்த ஆய்வு முறையொன்றை வளர்த்தெடுத்தல் வேண்டும்.

- பணிப்பெண்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை தினமொன்றை வழங்குவதற்காகவும் தொழில் எசமானர்களை ஊக்குவிப்பதற்காகவும் திறன் பயிற்சிகள் மற்றும் அரபு மொழி பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்தல் போன்ற சேவைகளை வழங்குதல் வேண்டும்.

- வெளிநாட்டுத் தூதரகங்களில் 24 மணிநேர அவசர தொலைபேசி அழைப்பு வசதிகள், அல்லது அத்துமீறல்கள், இம்சைகள் இடம்பெறும் வேலையிடங்களில் இருந்து தப்பி வரும் பணிப்பெண்களுக்கான 24 மணிநேர சேவைகள் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.

*வீட்டுப் பணிப் பெண்களுக்கான புறப்படு – முன் (pre departure training) பயிற்சிகளை தரமுயர்த்தல் வேண்டும்*

- உரிமைகள் தொடர்பான மேலதிக அறிவையும், பிற நாட்டு மொழி தொடர்பான அம்சங்களையும் பயிற்சி விடயங்களில் அதிகரித்தல் வேண்டும்.

- பணிபரியும் நாடுகளிலும், அங்கிருந்து திரும்பி வந்த பின்னரும், தொழில் எசமானர்களுக்கும் தொழில் முகவர்களுக்கும் எதிராக எவ்வாறு வழக்குகளை தொடர்ந்து நடத்துவது என்பது தொடர்பாக உள்ள செயல் முறைகள் பற்றி மேலும் அதிக தகவல்களை வழங்குதல் வேண்டும்.

- சட்டங்களை மீறுகின்ற தொழில் முகவர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்வதற்கான சேர்ப்புக் கட்டணம் மற்றும் அது தொடர்பான வழிமுறைகள் பற்றிய சட்ட வரையறைகள் பற்றிய தகவல்களை வழங்க வேண்டும்.

- வெளியேறும் பணிப்பெண்கள் தொடர்பாக பெயர், முகவரி, அவர்களது தொழில் எசமானர்களின் தொலைபெசி இலக்கம், தூதரகத்தின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம், பணிபுரியும் நாட்டில் செயற்படும் அவர்களது தொழில் முகவர்களின் நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் தொலைபெசி இலக்கம், தூதரகத்தின் தொலைபேசி இலக்கங்கள் ஏற்கனவே முற்பதிவு செய்தபடியுள்ள (pre programmed) தொலைபேசி அல்லது கைத் தொலைபேசி அட்டைகள்,

தேசியப் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை, அவர்களின் கடவுச் சீட்டின் ஒரு பிரதி, வீட்டுப் பணிப் பெண்களின் சொந்த மொழி மற்றும் அரபு மொழி ஆகிய இரண்டினாலுமான தொழில் ஒப்பந்தம் ஆகியன உள்ளடங்கிய தகவல் கோப்பு ஒன்று அவர்களிடம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

*எதிர்காலத்தில் வரவிருக்கும் குடிபெயர் தொழிலாளர்களின் அறிவைக் அதிகரிக்கும் வகையில் பகிரங்க நிகழ்ச்சித் திட்டங்களை பரவலாக்குதல் வேண்டும்.*

- பணிப்பெண்களை வேலைக்கு சேர்க்கும் போது அறவிடப்படும் கட்டணம் தொடர்பாக சட்ட ரீதியான வரையறைகள் மற்றும் சவுதி அரேபியாவில் தொழில் ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்களை எதிர்காலத்தில் வரவிருக்கும் குடிபெயர்வு பணியாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக அவர்களின் கிராமங்கள் மற்றும் ஊர்களை இலக்கு வைத்து தகவல் வழங்கும் நிகழ்வுகளை நடாத்துதல் வேண்டும்.
- அவர்கள் குடிபெயர்வதற்கு அல்லது ஒரு தொழில் முகவர் நிலையத்தின் சேவையை பெற்றுக்கொள்ளுவதற்கு முன்னர், எதிர்காலதில் குடிபெயரவிருக்கும் இப் பணிப்பெண்களுக்கு இத்தகவல்களை வழங்குகின்ற விடயத்தில் குடிபெயர்வோரின் உரிமைகள் தொடர்பாக பணியாற்றும் குழுக்களுடன் கூட்டாகப் பணியாற்ற வேண்டும்.
- பெண்கள் எதுவுமே செய்ய முடியாத விரக்தி நிலையில் நின்று செயற்படாமல் நன்றாக சிந்தித்து முடிவெடுத்து குடிபெயரக்கூடிய வகையில் அவர்களுக்கு தேவையான கல்வி மற்றும் ஏனைய சேவைகளுக்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

## சகல அரசாங்கங்களுக்கும்

வீட்டுப் பணிப் பெண்களுக்கு புரிகின்ற மொழியிலும் அரபு மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்ட, பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைப் படுத்தப்படக்கூடிய தொழில் ஒப்பந்தங்களை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பணிப்பெண்கள் தமது நாடுகளுக்கு திரும்பி வந்ததன் பின்னர் செய்கின்ற முறைப்பாடுகள் உட்பட, முறைப்பாடுகள் உள்ள பணிப்பெண்களுக்காகவும் அவற்றுக்கு பரிகாரம் செய்வது தொடர்பாகவும் உறுதி செய்வதற்காக செயல் முறையொன்றை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வேலை செய்யுமிடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் தப்பிப்போக முடியாமல் இருக்கும் வீட்டுப் பணிப்பெண்களை விடுதலை செய்வதற்கான முறைமையொன்றை உருவாக்க வேண்டும். தேசியச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும். வெளிநாட்டு ராஜதந்திர தூதுவர் சபைகள் மற்றும் தேவைக்கேற்ப அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையேயும் தொடர்பொன்றை ஏற்படுத்தல் வேண்டும். உதாரணமாக, சகல வீட்டுப் பணிப் பெண்களுக்கும் கைத் தொலைபேசிகள் வழங்குவதோடு, பல்மொழி அவசர அழைப்புச் சேவைகள் (டெக்ஸ்ட் செய்தி அவசர அழைப்புகள் - text message hotlines) உட்பட குறிப்பிட்ட நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் செயற் திட்டத்தையும் வழங்க வேண்டும்.

கொள்கைகளை வகுப்பதிலும் அவற்றைச் செயற்படுத்துவதிலும் குடிபெயர் வீட்டுப் பணிப் பெணிகளினதும் சிவில் சமூகத்தினதும் ஊக்கமான நேரடிப் பங்களிப்பைக் கோருதல் வேண்டும்.

## சர்வதேச தொழில் ஸ்தாபனம், மற்றும் குடிபெயர்வாளர்கள் தொடர்பான சர்வதேச ஸ்தாபனம் என்பவற்றுக்கு

2010ம் ஆண்டின் சர்வதேச தொழில் மாநாட்டில் வீட்டுத் தொழில் என்பது தரப்படுத்தப்பட்ட தொழில் வகை என்னும் விடயத்தை ஆராய்வுக்கு எடுக்கும்போது அதற்கு வீட்டுத் தொழில் தொடர்பான சாசனம் ஒன்றை முன்வைத்தல் வேண்டும். அதிலுள்ள சரத்துக்களை தேசிய சட்டத்தினுள் ஒன்றிணைப்பது பற்றியும் மற்றும் வீட்டுப்பணிப் பெண்களுக்கான மாதிரி சேவைகள் ஒப்பந்தமொன்றை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், அதற்கான பொறிமுறைகள், என்பவற்றுக்கான வழிகாட்டுதல்களை சர்வதேச தொழில் ஸ்தாபனம் செய்ய வேண்டும்

சர்வதேச தொழிலாளர் தராதரங்கள் மற்றும் சவுதி அரோபியச் சட்டங்களின் கீழ் அவர்களின் உரிமைகள் தொடர்பாக குடிபெயர் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் உரிமைகள் தொடர்பான கல்வியொன்றை பெற்றுக் கொடுக்கக்கூடிய தொழில்நுட்ப வேலைத்திட்டமொன்றை பரவலாக்குவதற்கு தேசியக் குழுக்களுடன் பணியாற்றல் வேண்டும்.

தொழிலாளர் சட்டதிட்டங்கள், தொழிலுக்கு சேர்த்துக்கொள்ளும் தராதரங்கள் மற்றும் சர்வதேச தொழிலாளர் தராதரங்கள் என்பவற்றுக்கு இணங்க நடைமுறைப்படுத்தல்களை பலப்படுத்துவதற்காக தொழில் நுட்ப உதவி மற்றும் விசேட தொடர்பாடல் முறையொன்றை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கங்களுடன் பணியாற்ற வேண்டும்.

பிராந்திய ரீதியான கூட்டுறவை வளர்ப்பதற்காக கொழும்பு செயற்பாடு (Colombo process), தற்காலிக ஒப்பந்த தொழிலாளர் தொடர்பான கல்ப் ஒன்றியம் (Gulf forum on Temporary Contractul Labourers), மற்றும் குடிபெயர்வுக்கும் அபிவிருத்திக்குமான பூகோள ஒன்றியம் என்பவற்றுக்கூடாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் உட்பட குறுகியகால குடிபெயர் உழைப்பாளர்களுக்காக பிராந்திய மட்டத்தில் ஆகக் குறைந்தளவான தராதரங்களை உருவாக்குவதற்காக அரசாங்கங்களுடன் பணியாற்ற வேண்டும்.

வீட்டுப் பணிப்பெண்களை ஈடுபடுத்துவதற்கும் அணிதிரட்டுவதற்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கும் தொழிற் சங்கங்களுடன் பணியாற்ற வேண்டும்.

## உலக வங்கி மற்றும் தனியார் நிதியங்கள் போன்ற நிதி வழங்கும் நிறுவனங்களுக்கு

குடிபெயர் வீட்டுப் பணிப் பெண்களுக்கான தேசிய அரச சார்பற்ற மற்றும் ஏனைய சிவில் சமூகங்களின் ஆலோசனைகள் மற்றும் சேவைகளை பெறக்கூடிய வகையில் அதிக நிதி மற்றும் நிறுவன ரீதியான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். இதற்குள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர் பற்றிய கல்ப் ஒன்றியம் போன்ற பிராந்திய செயற்பாடுகளுக்கும் ஆதரவு வழங்குதல் மற்றும் தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளினதும் தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளும் நாடுகளினதும் சிவில் சமூகங்களுக்கிடையே வலைப்பின்னல் அமைப்பை வளர்த்தெடுத்தல் வேண்டும்.

தங்குமிடங்களின் வசதிகளை அதிகரிக்கச் செய்வதற்காகவும், வெளிநாட்டு தூதரகங்களில் வீட்டுப் பணிப் பெண்களுக்காக பணியாற்றும் சமூகசேவையாளர்கள் உட்பட பயிற்றப்பட்ட காரியாலய ஊழியர்களுக்காவும் வளங்களை அதிகரிக்க வேண்டும்.

குடிபெயர விரும்பும் பெண்களுக்கு குடிபெயர்வதற்கான செலவுகளை பொறுத்துக் கொள்வதற்காக அதிக வாய்ப்பான வட்டி வீதத்தைக்கொண்ட சிறு கடனுதவித் திட்டங்களுக்கான நிதியங்களை வழங்க வேண்டும்.

தமது சொந்த நாடுகளில், நிலைத்து நிற்கக்கூடிய வருமானங்களைப் பெறக்கூடியதான செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள், மற்றும் பெண்களுக்கான நீண்டகால வீட்டுத் தொழில்வாய்ப்புக்கான திட்டங்களுக்கு நிதியுதவிகளை வழங்க வேண்டும்.